**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், செங்கல்பட்டு**

**OS.No.340/2022 P.W.1**

(சாட்சிக்கு திரு.V.பிரதாப், உதவியாளர் அவர்களால் சாட்சி பிரமாணம் செய்யப்பட்டது)

| | |
|---|---|
| பெயர் | சுந்தரம் |
| த/பெ. | ஏகாம்பரம் |
| வயது | 72 |
| வசிப்பிடம் | எண்.11/5, பொன்னியம்மன் கோவில் தெரு, மதுராந்தகம் |
| தொழில் | வரி வசூலிப்பவர் (ஓய்வு) |

**முதல் விசாரணை 02.03.2026**

நான் இந்த வழக்கில் வாதி. இன்று இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். 16.02.2020 தேதியிட்ட பிரதிவாதி என் பெயருக்கு எழுதிக் கொடுத்த அசல் அண்டிபாண்டு வா.சா.ஆ.1. 23.05.2022 தேதியிட்ட பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அசல் வா.சா.ஆ.2. 24.05.2022 தேதியிட்ட பிரதிவாதி வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக் கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை அசல் வா.சா.ஆ.3. 01.08.2022 தேதியிட்ட பிரதிவாதியின் வழக்கறிஞர் எனது வழக்கறிஞருக்கு கொடுத்த பதில் அறிவிப்பு அசல் வா.சா.ஆ.4.

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

(குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)